1

சிறப்பு வரைபடம் 1.1

## பணிகள் மற்றும் பணிகள் அல்லாதவற்றின் பணவீக்க இயக்கவாற்றல்கள்

### பணிகள், பணிகளல்லா மற்றும் முதன்மை பணவீக்க அசைவுகள் (கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு)




### முதன்மை பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண், ஆண்டிற்காண்டு)




குறிப்பு: சனவரி 2023 இற்கு முந்தைய தரவுகள் கொ.நு.வி.சு (2013=100) இன் அடிப்படையிலமைந்தது. அதேவேளை 2023 சனவரியிலிருந்து ஆரம்பிக்கின்ற தரவுகள் கொ.நு.வி.சு (2021=100 அடிப்படையிலமைந்தது)

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் கணிப்புக்கள், தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்.

பணிகள் பணவீக்கம் என்பது காலப்போக்கில் வீட்டு வாடகை, உணவகங்கள் மற்றும் விடுதி சேவைகள், கல்வி, தொடர்பூட்டல், போக்குவரத்து சேவைகள் மற்றும் ஏனையவை உள்ளடங்கலாக பணிகளின் விலைகளில் ஏற்படும் அதிகரிப்பினைக் குறிக்கின்றது. பொருட்களின் விலைகளுடன் ஒப்பிடுகையில், பணிகளின் விலைகள் குறைந்த தளம்பலைக் கொண்டிருப்பதுடன், நிரம்பல்-பக்க தடைகள் அல்லது வெளிவாரி அதிர்வுகளுக்கு படிப்படியாக சீராகுவதன் மூலம் அதிகரித்த நீடித்ததன்மையை வெளிப்படுத்துகின்றன. மேலும், பணிகளின் விலைகள், ஊதிய இயக்கவாற்றல்கள் உள்ளடங்கலாக உள்நாட்டு காரணிகளின் மீது பெருமளவில் தங்கியிருக்கின்றன. இதன் விளைவாக, பணிகள் பணவீக்கமானது அடிப்படை பணவீக்க அழுத்தங்களின் முக்கியக் குறிகாட்டியொன்றாக விளங்குகின்றது.

இலங்கையில், நுகர்வோர் விலைச் சுட்டெண் கூடைக்குள் கிடைக்கக்கூடியதாகவிருக்கும் துணை வகைகளைப் பயன்படுத்தி பணிகள் பணவீக்கமானது பெறுவிக்கப்படமுடியும். அதன்படி, மத்திய வங்கியினால் வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு, பணிகளுடன் தொடர்புடைய பொருட்கள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் கூடையில் ஏறத்தாழ அரைவாசிக்கு வகைகூறுகின்றது.[1] அதேபோன்று, பணி விலைகளின் அசைவுகள் முதன்மைப் பணவீக்கம் மற்றும் ஒட்டுமொத்த வாழ்க்கைச் செலவுகள் என்பவற்றின் மீது கணிசமான தாக்கமொன்றினை ஏற்படுத்துகின்றன. எனவே, பணிகள் பணவீக்கத்தை கண்காணித்தலானது, அதன் தூண்டுதல்களைப் புரிந்துகொள்வதற்கும், பணவீக்க சூழலை மதிப்பீடு செய்வதற்கும் அத்தியாவசியமாகின்றது.

இவ்வரைபடமானது, 2015 முதல் 2026இன் முற்பகுதி வரை, பணிகள் பணவீக்கத்தின் ஆண்டிற்காண்டு நடத்தையுடன் இணைந்து பணிகளல்லா பணவீக்கத்தையும் முதன்மைப் பணவீக்கத்தையும் காட்டுகின்றது. பணிகளல்லா பணவீக்கத்தின் குறிப்பிடத்தக்க தளம்பலுக்கு மாறாக, பணிகள் பணவீக்கம் காலப்பகுதி முழுவதும் ஒப்பீட்டளவில் நிலையானதாகக் காணப்பட்டது. முதன்மைப் பணச்சுருக்க அண்மைய நிகழ்வின்போது பணிகளல்லா பணச்சுருக்கமானது குறிப்பிடத்தக்க வகையில் தீவிரமடைந்த போதிலும், பணிகள் பணவீக்கம் சாதகமாக காணப்பட்டு, ஒட்டுமொத்த பணவீக்கத்தின் மீது மேல்நோக்கிய அழுத்தத்தைத் தொடர்ச்சியாக ஏற்படுத்தியது.

1 மத்திய வங்கி அலுவலர்கள், பணிகள் சார்ந்த கூறுகளின் அனைத்துமட்ட (முதன்மை) பொருட்கள் மற்றும் சேவைகளின் (2013=100 மற்றும் 2021=100) நுகர்வோர் விலைச் சுட்டெண் கூடையிலிருந்து நோக்கத்திற்கேற்ப தனிப்பட்ட நுகர்வின் வகைப்பாடு 2018இனை பயன்படுத்தி பெற்றனர். பணிகள் பணவீக்கம் தொடர்பான கூடுதல் தகவல்களுக்கு, 2025 ஓகத்து மாத நாணயக் கொள்கை அறிக்கையிலுள்ள 'சிறப்புக்குறிப்பு ஆ: பணிகள் பணவீக்கத்தைப் புரிந்துகொள்ளல்: இது முக்கியம்பெறுவது ஏன்?' இனை பார்க்கவும்.